**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **CC.No.338/2019**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.1**
**Defence**
**Court**

**Name :** ரஞ்சித்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.05.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்னர் வருசநாடு காவல் நிலையத்தில் நான் பணிபுரிந்தபோது 12.10.2018 ம் தேதி காலை 6.40 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர் அழகுபாண்டி அவர்களும், காவலர் கார்த்திகேயன் என்பவருடன் காவல் நிலையத்தில் இருந்து சிங்கராஜபுரம் அருகில் உள்ள அல்லால் ஓடை பகுதி வழியாக கண்காணிப்பு செய்துகொண்டிருந்தபோது ஆற்றுப்பாலம் அருகே காந்திகிராமத்தை சேர்ந்த

ராசு தேவர் மகன் உதயகுமார் என்பவர் வெள்ளை சாக்கு பையை கொண்டுவந்திருந்தார். அவரை சோதனை சார்ஆய்வாளர் செய்தபோது அதில் கஞ்சா போன்ற பொருள் இருந்தது. அதை சிறிது எடுத்து தீ பொறுத்தி பார்த்தபோது கஞ்சா போன்ற வாடை வந்தது. பின்னர் எதிரியிடம் இருந்து பொருட்களை கைப்பற்றி சோதனை கடிதம் பெற்றோம். பொருட்களை அத்தாட்சியில் கைப்பற்றினோம். பொருட்களையும் குற்றவாளியையும் நிலையம் கொண்டுவந்தோம். காலை 08.10 மணிக்கு நிலையம் வந்து சார்ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். சோதனை செய்ய சம்மதமா என்று அவரிடம் கடிதம் பெற்றோம் அதுதான் சோதனை சம்மத கடிதம் ஆகும். நான் சோதனை சம்மதகடிதம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் இட்ட சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.1, அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் சம்பவ இடத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சென்றோம். சம்பவ இடத்திற்கு தகவலாளி வரவில்லை. நாங்கள் காவல் நிலையத்தை விட்டு காலை 6.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு புறப்பட்டோம். எதிரியை எவ்வாறு அடையாளம் கண்டுபிடித்தோம் என்று சார்புஆய்வாளருக்கு தான் தெரியும். எதிரி வெள்ளைநிற சாக்குப்பை கொண்டுவந்திருந்தார். நாங்கள் மூவரும் சேர்ந்து சோதனை செய்தோம். சோதனை சம்மத கடிதத்தை சார்பு ஆய்வாளர் எழுதினார். சோதனை சம்மத கடிதம் இரண்டு பகுதிகளாக உள்ளது என்றால் சரிதான். சோதனை கடிதத்தின் கேள்விபகுதியில் எதிரியின் கையொப்பம் பெற்றுள்ளோம். நகல் பெற்றுக்கொண்டதாக அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம். இரண்டாவது பகுதியில் எதிரி சம்மதம் தெரிவித்த விபரம் எழுதி அதற்கு நகல்

வழங்கியதாக கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். எதிரி எழுதப்படிக்க தெரியாத நபர் என்றால் சரிதான். அதனால் அவர் கைரேகை பதித்துள்ளார். சோதனை சம்மத கடிதத்தை வாசித்து காட்டியதாகவும் அதன் பின்னர் புரிந்துகொண்டு கைரேகை செய்ததாக அதில் ஏதும் கூறப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மதகடிம் எந்த தேதியில், எந்த இடத்தில் தயார் செய்யப்பட்டது என்பது போன்ற விபரங்கள் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் போக்குவரத்து கொண்ட பகுதி என்றால் சரிதான். அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் தான் எழுதினார். சம்பவ இடம் குறித்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை. அதிலும் எதிரி கைரேகை வைத்துள்ளார். அத்தாட்சி நகல் எதிரிக்கு வழங்கப்பட்டதாக அதில் ஒப்பம் எதுவும் இல்லை. நான் அத்தாட்யிலும் எனது கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் உள்ள மாதிரி பொட்டலத்திலோ, மீதம் உள்ள கஞ்சாவிலோ விபரம் அடங்கிய குறிப்பு ஒ்ட்டப்பட்டதாக தனியே குறிப்பிடவில்லை. நாங்கள் காலை 8.10 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். அப்போது ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. இந்த வழக்கில் ஆவணங்களை எதையும் முறையாக பரிசீலனை செய்யாமலும், சாட்சிகளை யாரையும் விசாரணை செய்யாமலும், தங்களது காவல் நிலையத்தில் போடபட்டிருந்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக எவ்வித ஆதாரமும் இன்றி இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சி சொல்கிறேன்

என்றால் சரியல்ல. இந்த வழக்கில் போதைப்பொருள் விதிகள் சரியாக பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.